**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 164/2020**

**வா.சா. –1 (முருகேசன்)**

**நாள். 02.09.2024.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்த ராஜமாணிக்கத்தை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் இடம் வாங்கும் போதுதான் 2017 ம் ஆண்டுதான் தெரியும். 2017ல் கிரையம் வாங்கும் போது வில்லங்கம் எடுத்து பார்த்தேனா என்றால் கடைக்கு மட்டும் பார்த்தேன். கிரையபத்திரம் எந்த தேதியில் முடித்தேன் என்றால் 27.10.2017ல் முடித்தேன். 30.10.2017ல் கிரைய ஒப்பந்தம் ஒன்று பின்னால் உள்ள இடத்திற்கு எழுதி வாங்கினேன். 30.10.2017ம் தேதி இறந்த ராஜமாணிக்கத்தின் மனைவி மற்றும் இரண்டு மகள்கள் இருந்தார்கள். அவர்கள் கிரைய ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்துள்ளார்கள். ஒப்பந்தம் செய்த நாளிலிருந்து சுமார் 3 வருட காலத்தில் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன், அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த நேரத்தை பயன்படுத்தி அவ்வாறு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அவர் நல்லநிலையில் இருந்த போது ஏன் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அப்போது நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்து வந்தது. அது முடிந்த பின்பு அனுப்பலாம் என இருந்து விட்டேன். அந்த சொத்து சம்மந்தமாக திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் தெரிந்துதான் நான் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டேன். மேற்படி சார்பு நீதிமன்றத்தில் தீர்ப்பு பிறப்பிப்பதற்கு முன்பே 30.10.2017 தேதியில் சம்மத பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் போட்டுக் கொண்ட சொத்திற்கு நான் வில்லங்கள் எடுத்து பார்த்தேன். அதில் யார் பெயரில் இருந்தது என்றால் ராஜமாணிக்கம் பெயரில் இருந்தது. பதிவில்லா ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொண்ட அந்த இடத்திற்கான தாய் பத்திரம் இராஜமாணிக்கத்திடம் வாங்கினேனா என்றால் வாங்கினேன். கிரைய ஒப்பந்த தொகை ரூ.9,00,000/– பேசப்பட்டது. மேற்படி தொகையை நான் வங்கி கணக்கு

மூலம் டிரான்ஸ்பர் செய்தேன். நான் ஒப்பந்தம் செய்த சொத்தைப் பொறுத்து ராஜமாணிக்கம் 11 வாரிசுகளுக்கு 25.04.2013 தேதியில் உயில் ஒன்று ஒழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 27.10.2017ல் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு வரை பதிவு செய்து கொடுக்கும்படி நான் அவரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். தாவா சொத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் எங்கள் அனுபவத்தில் உள்ளது. ராஜமாணிக்கம் மற்றும் அவரது பக்கத்து வீட்டுக்காரர்களுக்குமிடையே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது ராஜமாணிக்கத்திற்கு சாதகமாக மேல்முறையீடு உத்தரவானது என்றால் எனக்கு தெரியாது. ரூ.100/- மதிப்புள்ள சொத்தைப் பொறுத்து ஏதேனும் ஒரு பத்திரம் எழுதிக் கொண்டால் அது கண்டிப்பாக பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். ராஜமாணிக்கம் நல்ல நிலையில் இருக்கும் போது நான் பத்திரம் எழுதி வாங்கவில்லை என்றும் அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்த சமயத்தை பயன்படுத்தி நோட்டரி பப்ளிக் மூலமாக வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.09.06 09:45:36 +0530

Additional District Judge,

Dindigul.